

மர்ம
முகமூடி!
லயன்
காமிக்ஸ்
ரூ.3/-

# ரூ.5000 பரிசுப் போட்டி!

டியர் ரீடர்ஸ்,

சென்ற ஆண்டு ஆரம்பித்த இந்தப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் பல **புதிய** வாசகர்களுக்காக இந்தப் பக்கம்!

வெளியீடு எண்: 67 அதாவது **"எமனுக்கு எமன்"** என்ற இதழுடன் சிறியதொரு ஆல்பம் இலவசமாக வழங்கப்பட்டது. அன்று முதல் வெளிவந்த ஒவ்வொரு லயனின் பின்னட்டையிலும் உள்ள நமது கதாநாயகர்களின் படங்களை வெட்டியெடுத்து ஆல்பத்தில் ஒட்ட வேண்டும்.

ஆல்பம் பூர்த்தியானவுடன் அதை எங்களுக்கு அனுப்ப வேண்டும். குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 10 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா ரூ. 500/- பரிசு உண்டு! தவிர நிறைய ஆறுதல் பரிசுகளும் உண்டு!

இந்தப் போட்டியில் கலந்து கொள்ள கீழ்க்கண்ட இதழ்கள் தேவை!

| | | |
|---|---|---|
| 1. | "எமனுக்கு எமன்" | - ரூ. 2-50 |
| 2. | "திக்குத் தெரியாத தீவில்" | - ரூ. 5-00 |
| 3. | புதையலைத் தேடி... | - ரூ. 2-00 |
| 4. | எமனுடன் ஒரு யுத்தம் | - ரூ. 3-00 |
| 5. | கானகத்தில் ஒரு கைதி | - ரூ. 2 50 |
| 6. | மீண்டும் ஸ்பைடர் | - ரூ. 5-00 |
| 7. | சிலந்தி வலையில் காரிகன் | - ரூ. 3-00 |

இவை அனைத்திலும் சிறிதளவு பிரதிகள் மட்டுமே கைவசம் உள்ளன. பிரதி விலையுடன் தபால் செலவு ரூ. 2/- சேர்த்து மொத்தம் ரூ. 25/- அனுப்பினால் ஆல்பத்துடன் இந்தப் பிரதிகளை அனுப்புகிறோம்.



அன்புடன்,

S. விஜயன்.

ஆசிரியர்.

# 7வது ஆண்டு மலர்!

## ஹாட்-லைன்!

1-7-91

வாசக நண்பர்களே,

உங்கள் அபிமான லயனுக்கு இன்றோடு ஏழு வயது பூர்த்தியாகிறது! வாழ்த்துங்கள்-இன்னும் நிறைய வளர வேண்டுமென்று!

ஆகஸ்ட் மாதம் **ரிப் கிர்பி** துப்பறியும் **"பொக்கிஷம் தேடிய பிசாசு"** வருகிறது! அத்தோடு ஒரு சூப்பர் நியூஸ்! ரூ. 5000/- பரிசுப் போட்டி அந்த இதழோடு முடியப் போகிறது! ஆமாம் ஆல்பத்தைப் பூர்த்தி செய்யத் தேவைப்படும் கடைசிப் படம் அடுத்த இதழின் பின்னட்டையில் இருக்கும்!

ஆல்பத்தை பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்பி வையுங்கள்! குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் பத்து அதிர்ஷ்டசாலி வாசகர்களுக்கு தலா ரூ. 500/- பரிசு செப்டம்பர் இறுதியில் அனுப்பப்படும்! அதைப் பற்றிய எல்லா விபரங்களும் நமது அக்டோபர் இதழில் வரும்!

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்! அது வரை-

good luck & good-bye



அன்புடன்,

எஸ். விஜயன்

(ஆசிரியர்.)


இயற்கையின் பாதையில்!
அட்லாண்டிக் கடலின் இருபுறமும் காணப் படும்மேன்-ஆப்-வார் என்னும் இந்த விசித் திர ஜந்து சில வேளைக ளில் வலுவான காற்றி னாலும், வீரியமுள்ள அலைகளாலும் அடித்து வரப்பட்டுகரையோரம் ஒதுங்குவதுண்டு-
வசீகரதோற்றம் கொண்ட பெரியதோர் நீர்க்குமிழாக கடல் பரப்பில் மிதக்கும் போர்த்துக்கீசிய மேன்-ஆப்-வாரிடம் எவ்வித அச்சுறுத் தலையும் காண முடியாது-
ஆனால் நேர் கீழே நூறு அடி வரை நீண்ட, விழுது போன்ற ஆயிரக் கணக் கான உறுப்புகள் விஷத் தன்மை கொண்டவை-
ஷெப்பர்டு பிஷ் எனப்படும் சிறிய ரக மீன்களுக்கு அந்த விஷம் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதால் அவை இஷ்டத்திற்கு அந்த விஷ இழைகளினூடே புகுந்து செல்வதுண்டு.
பெரிய மீன்கள் சுலபமாக இரை கிடைக்கிற ஆசை யில் அந்த சிறிய மீன்களை துரத்திக் கொண்டு விஷ இழைகளினூடே புகுந்து விடுவதுண்டு.
அந்தோ-! இழைகளின் விஷத்தால் உடனடி மரணம் சம்பவித்து அவை-களே இரையாகிப் போய்விடுகின்றன!

# ரிப்லியின் நம்பினால் நம்புங்கள்!



பிறந்த குழந்தை முதன்முறையாக தன்னுடைய நுரையீரலை காற்றினால் நிரப்பிக் கொள்ள சராசரி மனிதன் சுவாசிக்க எடுத்துக் கொள்ளும் முயற்சியை விட 50 மடங்கு கடுமையான முயற்சியை மேற்கொள்ளுகிறது!



மோரீஸ் டவுனைச் சேர்ந்த வில்லியம் டைட்டன் என்பவர், 'தன் வாழ்நாளில் மதுவை அருந்தியதே இல்லை. ஆனால் ஒயினைச்சுவைத்து தரம் நிர்ணயிக்கும் தொழில் முறை நிபுணராக 72 வருடங்கள் பணியாற்றி இருக்கிறார்.



மழைக் காலத்திற்காக எறும்புகள் உணவை முன்கூட்டியே சேமித்துக் கொள்வது போல், பழுப்பு நிற வகை அணில்கள் ஒவ்வொன்றும் நிமிடத்திற்கு ஒன்று வீதம் ஆயிரக்கணக்கான பழக்கொட்டைகளை புதைக்கும் ஆற்றலுடையவை!



பிரான்ஹா வகை மீன்களிடம் மனிதன் அகப்பட்டால் போதும்-சதையைக் கடித்துக் குதறி உண்டு இல்லை என்று ஆக்கி விடும். சுறாக்களிடம் அகப்பட்டு மாண்டவர்களை விட பிரான்ஹா மீன்களால் பலி கொள்ளப்பட்டோர் எண்ணிக்கை அதிகம்!




ஆர்டிக் பகுதிக்கு வடக்கேயுள்ள கோலா தீபகற்பத்தில் ஆராய்ச்சிக்காக இரஷ்யர்கள் தோண்டிய கிணறுதான் உலகிலேயே மிக ஆழமான குழியாகும். அதன் ஆழம் 35,000 அடிகளுக்கும் மேலே!

# சினிமா...சினிமா...



அதோ- மத்திய கிழக்கிலி-ருந்து வந்திருக்கும் கலைக் குழுவினர்!
STUDIO
பிரபல ஹிந்தி நட்சத்திரம் ராகேஷ் கன்னு!
ஹலோ- மிஸ்டர் ராகேஷ்!
அதோ அவர்தான் சுமிதாப்பச்சன் அவர் சாரு சின்ஹா! அவங்க மிஸ் ஜெயபாதுரி!
ஓ-நோ! நாங்கள்-லாம் எங்களோட அபிமான நட்சத்-திரம் டம்மி ஹூப்-பரைப் பார்க்க வந்திருக்கோம். அவரை காட்டாம
1-29
ஓ- 'பிரம்மச்சாரி' யிலே அவரோட சோகம் கப்பிய முகம்- அடடா!
வாங்கம்மா- இதோ இங்கே இருக்கார்! உங்களோட அபி-மான கதாநாயகன் டம்மி கூப்பர்!
டம்மி எங்கே இருக்கார்?
ஙே- கறுப்புத் தாடி- பூதம்!
எழுந்திரிச்சுப் போயி கூட்டிட்டு வா!
ஹே சார்லி- எங்கே ஓடிப் போயிட்டே?



மர்ம முகமூடி
ஒரு பிரபல நாட்டின் தலைநகரில்-
எளிய, சாதாரண தோற்ற முடைய ஒரு நபர் தபால் நிலையத்திலிருந்து வெளி யேறி, சுற்றுமுற்றும் கவன மாக நோட்டமிட்டு விட்டு சாலையை கடக்க யத்தனித் தான்.
அதே வினாடியில்-
அதோ-வருகிறான்-காரைக் கிளப்பு!
தொலைந்தான்!
சீறிப் பாய்ந்தோடியது அந்தக் கார்-
பார்த்துக் கொண்டி ருந்தவர்கள் கூச்ச லிட்டனர்-
பிரேக் கிறீச்சிட்டது-
5


ஜனங்கள் குவிந்தார்கள்
கண்மூடித் திறக்குமுன் காரின் குறுக்கே வந்து விட்டான்!
உயிர் இருக்கிறது- மருத்துவமனைக்கு கொண்டுபோவோம், வா!
பெருநகர் சாலைகளில் இதெல்லாம் சகஜம்-
போலீஸும், ஆம்புலன்ஸும் வரும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டும்!
மருத்துவமனைக்கு எனறு காதில் விழுந்தது-
அவனை இடித்துத் தள்ளியவர்களே தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்-
அதோ-போலீஸ்!
அதையடுத்து-
ஸார்-சாட்சிகள் எதுவுமே தெளிவாக இல்லை! காரில் இருந்தவர்களை யாருக்குமே சரியாக அடையாளம் சொல்லத் தெரியலை!
......வாடிக்கையான சங்கதி! கார் இல்லை-நம்பர் இல்லை-அடிபட்டவனையும் காணோம்-


அருகிலோ-
செத்துப்போய் விட்டான்-
பாலத்தின்மீது ...க் கிப் போட்டுவிட்... போய்விடுவோம்
NARROW WAY
தபால் நிலயத்திலிருந்து வெளியேறி வந்தான்- அவற்றை போஸ்ட் பண்ணியிருப்பானே!
அப்படித்தானிருக் கும்! ஆனல் தபால் துறையினரிடம் கை வரிசை செல்லுபடி யாகாதே!
மிஸ்டர் ஜெல்ட்டுக்கு திருப்தி ஏற்படாது!
அவைகளை அவன் போஸ்ட் செய்து விட்டான் ஸார்- என்ன செய்வது?
அநேகமாக அமெரிக்கா விலுள்ள தன் வீட்டிற்குத் தான் அவற்றை போஸ்ட் பண்ணியிருப்பான்!
அவனுடைய அமெரிக்க விலாசத்தை கண்டுபிடித்து வீயெஸ்ஸுக்கு உடனே தந்தியடியுங்கள்- தரைமட்டமாக்கச் சொல்லி! அப்படியே அந்த இரு கையாலாகாத கோட் டான்களையும் 'கவனிக் கச்' சொல்!


அவன் அவற்றை போஸ்ட் செய்யுமுன் தடுத்து நிறுத்த தவறிய நம்மை பாஸ் உயிரோடு தோலை உரிக்காமல் விட்டாரே-நாம் அதிர்ஷ்டசாலிகள்தான்!
சந்தேகமில்லாமல்!
அவருடைய இந்த இரக்கம் ஏனோ எனக்குள் நடுக்கத்தை ஏற்படுத்துகிறது-
நீ சொல்வது புரிகிறது எனக்கு-ஹே-ஆ ஆ-ஐயோ!
காரியத்தை கச்சிதமாக முடிக்கத் தவறிய கைக்கூலிகளுக்கு மிஸ்டர் ஜெல்ட்டின் தண்டனை மரணமே!
ஒரு சில தினங்களுக்குப் பின் ஒரு அமெரிக்க நகரில்-
ஒன்றுகூட மிஞ்சக்கூடாது-
ஹூம்ம்-இந்த மாபாதகத்தைச் செய்ய எனக்கு மனசில்லை! என்ன செய்வது மிஸ்டர் ஜெல்ட்டின் கோபத்திற்கு ஆளானால் உயிர் உடலில் மிஞ்சாதே!



அந்த வீடு எரிக்கப்பட்டதில் அர்த்தமேயில்லே-ஏனெனில் அவர்கள் குறிவைத்த தபால் உறை வேருெரு முகவரியை சென்றடைந்திருந்தது-
ஏய்-அதைப் பிரிக்காதே!
ஓ! விசேட குறியீட்டை எப்படி நான் கவனிக்கத் தவறினேன்?
ஸார் அவசர குறியீடு R-1 பொறிக்கப்பட்ட கடிதம்-
தாங்க் யூ-மேவிஸ்!
உளவுத் துறை நேரடியாக சம்பந்தப்படாத விவகாரம் இது-காரிகன்-
இது பயங்கர மேல்மட்ட விவகாரம்! இந்தா உனக்குரிய அனுமதிச் சீட்டு!
யெஸ், மேவிஸ்? குட்-மிஸ்டர் காரிகனே உள்ளே அனுப்பு!
மிஸ்டர் காரிகன்! மதிநுட்பமும், ஆற்றலும் ஒருங்கிணைந்த, துணிச்சல் மிக்க, அதிர்ஷ்டத்தின் துணையுடைய ஒரு உளவாளி வேண்டுமென்று உன் தலைவரிடம் கோரினேன்-அவர் உன்னை தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிருர்-சரி-பயணத்திற்கு உடனடியாக தயாராகு!
பயணமா? விவகாரம் என்ன என்று கூட இன்னமும் தெரிந்து கொள்ளாத நிலையில்-
மரணத்தோடு விளையாடும் விவகாரம் இது! விவரமாக சொல்கிறேன்-கேட்டுக் கொள்!



அவர் விளக்கியதும்-
சுவாரஸ்யமான விவ-காரம்தான் நான் ரெடி-மிஸ்டர் ப்ர-
நிறுத்து
உன்னைப் பொறுத்தவரைக்கு நான் அமெரிக்க ஜனாதிபதியல்ல! 'மிஸ்டர்R'! அவ்வளவுதான்! ரொம்ப நெருக்கடி ஏற்பட்டால் மட்டுமே என்னோடு நீ தொடர்பு கொள்ள வேண்டும்!
இங்கே உடனடி தொடர்புக்கு இதோ இருக்கிறார்-நில்லி!
சரி-நான் எங்கே ஆரம்பிக்க வேண்டும்?
இங்கேயே-இதோ-இவற்றை பார்த்து விட்டு உன் கருத்தை சொல்!
கொடுங்கள் இப்படி!
ம்ம்-சிறுபிள்ளைகள் ஆடுகின்ற ஆட்டத்தை யாரோ ஒரு பெரிய மனிதன் ஆடிக்கொண்டிருப்பது போல் இருக்கிறது-
பொறுப்பற்ற போக்கிரியின் விளையாட்டு என்று சொல்கிறாய்?
அப்படித்தான் தோன்றுகிறது!
ஆனால்-வேறொரு உண்மையும் உறைக்கிறது!
சபாஷ்! காலணியின் கீழே மிதிபட்டுக் கிடக்கும் நபரை அடையாளம் தெரிகிறதா உனக்கு?
ஸாரி-தெரிய வில்லை ஸார்!



ஒரு பிரபல நாட்டின் நிதி அமைச்சர் அவர்·
உயிருள்ளவரை அடிமைப்பணி செய்வேன் என்று புராதன சடங்கு முறையில் பிரமாணம் செய்வது இது!
காரணகர்த்தா-டிரிடான்! ஒரு பயங்கரவாத கும்பல்!
மிதித்துக் கொண்டிருக்கும் நபர் தான் டிரிடானா?
நோ! அந்தக் கும்பலின் தலைவனாக அல்லது தலைவர்களில் ஒருவனாக இருக்கக் கூடும்!
'டிரிடான்' என்ற பெயரில் இரண்டு உண்டு-ஒன்று-சட்டபூர்வமான, சர்வதேச அளவிலான வியாபார அமைப்பு மற்றது-பயங்கரவாதக்கும்பல்!
முன்னது பின்னதற்கு ஒரு திரையோ?
அப்படித்தான் யூகிக்கிறோம்! ஆனால் குடைந்து பார்த்ததில் அப்படியில்லை என்று தோன்றுகிறது! உண்மையோ அல்லது திட்டமிட்ட திசைதிருப்பலோ தெரியவில்லை!
ஆக-என்னுடைய பணி-?
பயங்கரவாதக் கும்பலை கண்டுபிடித்து அதன் முகத்திரையை கிழிக்கவேண்டும்! உலக நாடுகளில் பொருளாதாரத்தை அது சீர்குலைக்கு முன் பூண்டோடு வேரறுக்க வேண்டும்!



அது சம்பந்தமாக பைலில் என்ன தகவல் இருக்கிறது?
எட்டு வெவ்வேறு நாட்டு விசேட உளவாளிகளின் சோகக் கதைதான் பைலில் உள்ளது-
டிரிடானை தேடிச் சென்ற அவர்களுக்கு விபத்தினால் மரணம் சம்பவித்தது!
கூடுதலாக இந்த புகைப்படங்கள் மட்டுமே! ஆங்-இந்த படங்களை எடுத்த நபரும் விபத்தில் மாண்டு போய் விட்டான!
நம். உளவாளிகளில் ஒருவர் டிரிடானை ஊடுருவிச் சென்று எடுத்த படங்களா இவை-நில்லி?
ஆமாம்! போஸ்ட் செய்த பின் சற்றைக் கெல்லாம் சாலையில் கார் மோதி செத்துப்போய் விட்டார்!
மறுமுனையில் தபால் சென்று சேரும் காலகட்டத்தில் அவருடைய ஃபிளாட தீக்கிரை-யாகி விட்டது-
நீ ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!
கடைசி உளவாளி இப்பணியில் ஈடுபட்டிருந்த உண்மை எனக்கும் நில்லிக்குமட்டுமே தெரியும்-அப்படியிருந்தும் எப்படியோ எதிரிகளுக்கு தெரிந்து விட்டது!


உயிருக்கு உத்தர வாதம் இல்லாத பணி இது காரிகன்!
இதை ஒரு சவாலாக நினைக்கிறேன் நான்!
உன் மனவுறுதியை பாராட்டுகிறேன்!
உனக்கு தேவையான சில கூடுதல் விபரங்களை இப்போது தெரிவிக்கிறோம்.
என் குறியீடு-R-நில்லி-Z-
இந்த வாட்சில் தனித்தனி பட்டன்கள் உண்டு.தேவையானதை அழுத்தினால் எங்களோடு தொடர்பு கிடைக்கும்!
இன்னொரு முக்கியமான அறிவுரை காரிகன்-யாரையும் நம்பாதே!


சில நிமிடங்களுக்குப் பின்-
ஹெலிகாப்டர் ஏன் இன்னமும் வர-வில்லை-போய் ரேடியோ மூலம் விசாரித்து விட்டு வருகிறேன்!
ஓ.கே-நான் காத்திருக்கிறேன்!
ஆரம்பமே கோளாறு!
காரிகன் காத்திருந்த வேளையில் திடீரென்று பின்னால் ஒரு மனிதன்-


அவரை கீழே தள்ளிவிடும் நோக்கத்தோடு நைச்சியமாக ஓடி வர-
நிழல்! நில்லியோ-? எ-என்-னது-
படார்!
யாரையும் நம்பாதே என்றார் நில்லி-
ஆனால் அதற்குள் யாருக்கோ தெரிந்துவிட்டது, எப்படி?
நான் இங்கிருப்பது இரண்டு பேர்களுக்கு மட்டுமே தெரியும்! பித்தலாட்டப் பேர்வழி யாரென்று கீழே போனால் தெரிய வரலாம்!
ஹைக்கன் என்ன ஆயிற்று? காரிகன் செத்துவிட்டான் இல்லையா?
இன்னும் இல்லையடா- வஞ்சக நாயே!


டிரிடான் விவகாரம் எப்படிப் பட்டது என்பதற்கு அந் நிகழ்ச்சி ஒரு சாம்பிள் என்று எண்ணிக் கொண் டார் காரிகன்!
ஹைக்கன் கோட்டை விட்டுவிட்டான்- ஆனால் நான்-
கும்!
நீயும் என்னை எதுவும் செய்ய முடியாதடா மூடா!
ஏன்-ஏன் இந்த துரோகச் செயல் நில்லி?
நாடுகளை ஆட்டிப் படைப்பது சுவராஸ்யமான சங்கதி இல்லையா-? டிரிடானில் நானும் ஒரு அங்கம்!
ஓ.கே! ஹைக்கன் மாண்டு போனான்! என்னையும் மடக்கிவிட்டாய்- ஆனால் டிரிடான் உன்னை சும்மா விடாது!
பந்தயத்திற்கு வருகிறாயா?
நான் இப்போது பாஸை நம்பத் தான் வேண்டும்- இல்லையேல் எல்லாமே அர்த்தமற்றதாகி விடும்-
வாட்சில் குறியீடு R-க்குரிய பட்டனை அழுத்தி-
ஆங்- இதில் விஷமம் செய்யப் பட்டிருக்கிறது!



டூம்!
உன் மண்டையிலே மசாலா இருக்கிறது காரிகன்- அல்லது அதிர்ஷ்டத்தின் பார்வை இருக்கவேண்டும். ஆனுல இதெல்லாம் மிஸ்டர் ஜெல்ட்டிடம்-ஓஓஓ-
தெரிந்தோ, தெரியாமலோ பெயரை உளறிவிட்டாய்-ஆக-நான் தேடிச் செல்ல வேண்டிய நபர்-ஜெல்ட்!
குறியீடு -Zக்கு போன் செய்தார் காரிகன்-
என்ன காரிகன்? அதற்குள் என்ன விவகாரம்?
அப்படியில்லே ஸார்-விஷயத்தை கேட்டால் நீங்கள் மனமுடைந்து போய் விடக்கூடும்!
யார்-நில்லியா இதைச் செய்தான்? ஆண்டவனே-இனி நான் யாரைத் தான் நம்புவது?
உடனே சீஃப்பை இங்கே அனுப்பி வையுங்கள் சார்!
என்னை விட்டுவிடு-காரிகன்! இந்த விவகாரத்தில் உனக்கு நான் எந்த வகையான ஒத்தாசையும் செய்யத் தயார்!
விநோதமான வகையில் நீ இனி என்னுடனேயே வரப்போகிருய்!


காரிகனின் சீஃப் சற்றைக்கெல்லாம் அங்கே வந்து சேர்ந்தார்-
என்னப்பா காரிகன்?
இவன் ஒரு நம்பிக் கைத் துரோகி. ஸார்!
நான் சொல்லும் வரை இவனை எங்கேயாவது பதுக்கி வைக்க வேண்டும் ஸார்!
இவனை பேச வைக்க முயற் சித்தால் என்ன?
நடக்காது! என் உரிமையை மீறிய சட்ட விரோத செயலாகும் அது!
வேறு வகையில் நில்லி எனக்கு உதவப் போகிறான்!
காரிகனின் விமான டிக்கட்டை, நில்லி பெய ரில் வேறொரு விமானத் திற்கு மாற்றுங்கள் ஸார்-



உளவுத் துறையின் இரகசிய தளம் ஒன்றில்-
சரியான தருணத்தில் காரிகன் செத்துவிட்டதாகவும் நில்லி தலை மறைவாகிவிட்டதாகவும் அறிக்கைவிடுங்கள் சீஃப்!
அட்டகாசமான மேக் கப்!
உன் பித்தலாட்டம் செல்லுபடியாகாது காரிகன்-
உன்னைப் பற்றிய குறிப்பேடு எங்கள் வசம் உள்ளது. ஆறு மணி நேர விமான பயணத்தில் அதை மனப்பாடம் செய்து விடுவேன், பிறகு உன் சொந்த மாமாவைக்கூட என்னால் ஏமாற்றி விட முடியும்!
சற்றைக்கெல்லாம் செய்தி பரவியது-
மிஸ்டர் ஜெல்ட் அமெரிக்கா விலிருந்து தகவல்! ஹைககன் தோற்றுவிட்டான் எனவே, தங்களுடைய உளவாளியை தீர்த்து கட்ட நில்லி முயன்றிருக்கிறான்- விரைவிலேயே இங்கே வருவதாக தகவல்-
மடையன்! ம்ம் புத்தி காணாது! ஆனால் அதுவும் ஒரு வகையில் சாதகமான அம்சமே! வீயெஸ் ஸூக்கு தகவல் அனுப்பி அவனோடு சோந்து கொள்ளச் சொல்!


காரிகனின் உடல் கண்டு பிடிக்கப் பட்ட மறு நிமிடமே நில்லியை அரெஸ்ட் செய்ய அமெரிக்க அரசு உத்தர விடும்! அதை தவிர்க்க-
உன் மருமகள் நாடகமாட வேண்டும்!
"மருமகளுக்கு" உத்தரவு சென்றது! அதைத் தொடர்ந்து-
நில்லி கொலைக் குற்றத் திலிருந்து தப்பிக்க அவருடைய மனைவி யாக நான் நடிக்க வேண்டுமாம்-
இந்த டிரிடான் கும்பல் என்னைப்பற்றி என்னதான் நினைத்துக்கொண்டிருக் கிறது?
சரி நான் கிளம்புகி றேன் ஸார்!
ஓ.கே.நான் 'காரிகனை' புதைக்க ஏற்பாடு செய்கிறேன்!
எப்படியும் நான் தப்பி விடுவேன்- பாருங்கள்!
விமான நிலையத்தில்-
நில்லியின் இந்த சுயசரித குறிப்பு களை மனப்பாடம் செய்துகொண்டு பிறகு சமயோசிதமாக நாடகமாட வேண்டும் நான்.
டிரிடான் குழுவினர் ஒருவரை யொருவர் எந்த அளவுக்கு தெரிந்து வைத்திருப்பார் களோ? மேலோட்டமாகத்தா னிருக்கும்-அப்படித்தான் இருக்கவேண்டும் நில்லி விஷ யத்தில் மட்டுமாவது!
மிஸ்டர் நில்லி-சர்வதேச வரவேற்பு பகுதிக்கு வரச் சொல்லி அழைப்பு உங்களுக்கு!
?



சீஃபுக்கு மட்டும்தான் தெரியும் நான் இங்கே வந்திருப்பது! இல்லே-இதுவும் டிரிடானின் சூழ்ச்சி வலேயோ?
சரி-போய்த்தான் பார்ப்போமே!
ஓ-டார்லிங்! வந்துவிட்டீர்களா? எங்கே வராமல் இருந்து விடுவீர்களோ என்று ஏங்கிக் கொண்டிருந்தேன்!
அப்ப்!
ஆ-அம்மா! யாயா-ர் நீ? எ-ன்ன இது? ஐயோ-
உஷ்ஷ்! நடியுங்கள்! டிரிடான் போட்டோ அனுப்பவில்லே! வேறு எப்படி நான் உங்களே அடையாளம் கண்டு கொள்வது?
டிரிடான் ஆளா? விடுவேஞ உன்னே!
புது வேடம் நமக்கு! ரெஜினல்டு ஸ்மித்ஸ் என்று நமக்குப் பெயர் இப்போது!
அப்பாடா-இவள் என்னே தெரிந்து கொள்ளவில்லே!
NO VISITORS BEYOND THIS POINT




ல-3



உருமாற்றம் அவசியம்' கண்ணுடியை கழற்றி விடுங்கள். மீசையையும் மறையுங்கள்!
ஓ.கே-டியர்!
விமானம் கிளம்ப எவ்வளவு அவகாசம் இருக்கிறது?
அரை மணி நேரம்!
என் பர்ஸில் பாட்டரி ஷேவர் இருக்கிறது-சட்டென்று மீசையை மழியுங்கள்!
மீண்டும் காரிகனுக மாற வேண்டுமா? அடக்கடவுளே!
ரேசரை ஓடவிட்டு, போலி மீசையை பிய்த்தெடுத்தார் காரிகன்-!
எப்படி இருக்கு?
ஜோர்! தலை முடியை வித்தியாசமாக வாரிக் கொள்ளுங்கள்!
காரிகனை டிரிடானுக்கு ஏற்கனவே தெரியுமா?
உளவுத் துறையில்-
நாடகத்தை அரங்கேற்ற வேண்டும்.
டாம் இதை தந்தியில் அனுப்பு!
வாட் ? காரிகன்-செத்துவிட்டாரா?
'டிரிட்டான்' பயங்கரவாதக் கும்பலை ஒழிக்கும் முயற்சியில் புறப்பட்ட ஏஜெண்ட் காரிகன் நில்லியால் கொலை செய்யப்பட்டு விட்டார்! அதைத் தொடர்ந்து நில்லி தலைமறைவாகி, நாட்டை விட்டுத் தப்பும் முயறசியில் உள்ளார்! அநேகமாக லண்டனை நோக்கிப் போய்க் கொண்டிருப்பார்! உடனே கைது செய்யவும்'' -என்பதே அந்த செய்தி!



செய்தி காரிகனின் விமானத் திறகும் எட்டியது!
லிஸி விமானத்தில் நில்லி என்று யாரும் இருக்கிறார்களா?
புக்காகி இருக்கிறது- ஆனால் வரவில்லை. மாற்று நபர் அந்த இடத்தில் இருக்கிறார்.
லண்டனில்-
ஃப்ளைட் 504ல் இந்த நபர் இருக்கிறாரா என்று சோதித்தறியுமாறு அமெரிக்கா வேண்டுகோள் விடுத்திருக்கிறது.
கொலைக்குற்றவாளியா-? ஓ.கே.-உடனே ஆளை அனுப்புகிறேன்!
யாரையோ நீங்கள் கொன்று விட்டதாக எனக்கு வந்த உத்தரவில் இருந்ததே! யாரை? எதற்காக?
அமெரிக்க உளவாளி காரிகன்! நம் டிரிடனை வேரறுக்க தூண்டி விடப்பட்ட நபர்!
காரிகனை நீங்கள் கொன்றது அவர்களுக்கு தெரியுமா?
கண்டுபிடித்து விடுவார்கள்- அவனுடைய உடலை மறைக்க முடியாது போய்விட்டது!
முட்டாள்தனமான தவறு அது!
ஜெல்ட்தான் தீர்மானிக்க வேண்டும்!
நில்லியை கைது செய்ய உத்தரவிடப்பட்டால், நமக்கு வேண்டிய போலீஸ் அதிகாரிகளின் உதவியோடு உங்களை காப்பாற்றி விடுவார்-
ஓ.கோ! போலீஸாரின் உதவியை நான் இங்கே நாடுவது கூடாது என்று புரிந்து விட்டது!


காரிகனின் விமானம் தரையிறங்கியது-
மறு உத்தரவு வரும் வரை பயணிகள் எல்லோரும் இருக்கையிலேயே இருக்கவும்-
ஸார்-என்னோடு கொஞ்சம் வருகிறீர்களா?
உங்களை மூடி மறைக்கும் ஏற்பாடு.நமக்கு வேண்டிய போலீஸ் அதிகாரி அவர்.
எல்லோருமே மிஸ்டர் ஜெல்ட்டின் பாக்கட்டினுள்தான் போலும்!
உண்மைதான்!
சோதனை முடியப் பெற்று வெளியேறினர்!
மிஸ் வியெஸ் எப்படி இருக்கிறாய்!
ஹலோ-ஹாக்கின்ஸ்!
நீ-?நில்லி-? ஆனால்
பாதுகாப்பு நடவடிக்கையாக சில மாற்றங்கள் செய்திருக்கிறோம்!
நேரே தலைவரை பார்க்கச் சொல்கிறாயா ஹாக்கின்ஸ்?
பார்ப்பதா? நீ அவரை சந்திக்கலாம்-அவ்வளவுதான்-இதுவரை யாரும் ஜெல்ட்டை பார்த்தது கிடையாது!


இலண்டனின் இருண்டதொரு வீதியில் கார் விரைந்தது...!
இவன் கண்களை கட்டு வீயெஸ்!
ஏன்? என்ன அவசியம் எதற்கு?
கேள்வி கேட்பதை இங்கேயே நிறுத்திக்கொள் அதுதான் உனக்கு' நல்லது!
ஸாரி நில்லி!
இது ஒரு வாடிக்கையான ஏற்பாடு!
அவரை ஏற்றிச்சென்ற கார் திரும்பி, வளைந்து ஓடியது-காதில் விழுந்த ஓசைகளை வரிசையாக நினைவேட்டில் பதிந்து கொண்டே சென்றார் காரிகன.
முடிவில்-
ஆல்ரைட் நில்லி நிதானமாக கீழே இறங்கு!
மிஸ்-இனி இவர் எங்கள் வசம்!
ஜெல்ட் பொறுமையிழந்து காத்திருக்கிறார்.
25


ஹேய்ய்! என்ன இது-
ஆயுதம் எதுவுமில்லே!
எப்படி இருக்கும்? விமானத்தை விட்டிறங்கி நேரே இங்கே வருகிறேனடா-முட்டாள்!
மிஸ்டர் ஜெல்ட்டின் பாது காவலர்கள் நாங்கள்- எங்கள் கடமை இது!
க்ளோ-க்ளோ-! அந்த ஆளை உள்ளே அனுப்பு!
இந்த வழி-ஸார்!
இங்கே இதற்கு முன் வந்தது இல்லையா-நில்லி?
நோ! நான் அமெரிக்காவிலே நியமனம் செய்யப்பட்டவன்!
அப்படியானால்-நான் சொல்கிற படி செய்யுங்கள்- குனிந்து-பணிவாக வணங்குங்கள்!
அப்படியொரு அகம்பாவம் பிடித்த நபரா-ஜெல்ட்?
உஷ்ஷ்! ப்ளீஸ்! ஜெல்ட்டுக்கு கோபம் வந்ததோ கொஞ்சம்கூட கருணை காட்ட மாட்டார்!


ஏன் இன்னும் தாமதம்? நில்லியை உள்ளே கொண்டுவா!
முட்டாள் பெண்ணே! மாஸ்டர் பொறுமையிழந்து விட்டார்!
கண் கட்டை அகற்றுங்கள்-
கட்டு அகற்றப் பட்டதும் பார்வை சமனப்படுமுன்-
பணிந்து வணங்குங்கள்- என்று மன்றாடினாள் வீயெஸ்.
ஜெல்ட்டை ஏறிட்டு நோக்கினார் காரிகன்!
ஹா! ஹா.. ஹா
ஒவ்-! தொலைந் தீர்கள்!


ஸாரி ஸார்! ஆச்சரியப்பட்டுப் போனேன்!
இம்மாதிரி முகமூடிகளை அணிவது எனக்கு ரொம்பப் பிடிக்கும்! உனக்கு சம்மதம் இல்லையா?
அதெல்லாம் இல்லை ஸார்!
அவனுடைய கோபத்தை கிளரவே அப்படி சிரித்தேன்!
உள்ளே எப்படி பிரவேசிக்க வேண்டுமென்று வீயெஸ் கற்றுத்தரவில்லையா?
சொன்னேன் ஸார்! நில்லி ப்ளீஸ்-பணிந்து வணங்குங்கள்!
வேண்டா வெறுப்பாக தலையை சற்று தாழ்த்தினார் காரிகன்.
இப்படித்தான் வணங்குவதோ? டிரிடான் பிரமாணம் எடுத்துக் கொண்டாயல்லவா?
ஆமாம் ஸார் என் நாட்டிலேயே!
ம்ம்-க்ளோ-க்ளோ-ஒன்று கொடு!
யெஸ்-ஷா!
கும்!
மாஸ்டருக்கு ஒழுக்கம் முக்கியம்!
புரிந்து கொண்டாயா-இப்போதாவது!


வீயெஸ்-உன் இரக்கத்தை மூட்டை கட்டி வை-இல்லையேல்-
நோ-ப்ளீஸ்-நோ!
அடிமை பிரமாணத்தைச் சொல்-நில்லி-இல்லையேல் மரணத்தைத் தழுவுவாய்!
வாயைத் திறக்க மாட்டாயா-என்ன ஒரு அகம்பாவம் உனக்கு!
க்ளோ-க்ளோ கொடுத்த அடியால் பொறி கலங்கிப் போயிருந்த காரிகன் மெள்ள நிதானத்திற்கு வந்தார்-
நான்-நில்லி-தூசியையவிட கீழானவன்-ஊழியனாகவும், அடிமையாகவும் ஆயுள் காலம் முழுக்க பணியாற்றுவேன்-
தெளிவாக வரவில்லை-ஆனாலும் இதுபோதும்-
அடுத்து உன்னை நான் சில கேள்விகள் கேட்பேன். தப்பாக ஒரு விடை வந்தாலும் செத்தாய் அத்தோடு!
கேள்வி; காரிகனை தீர்த்துக்கட்ட நான் உத்தரவிடவில்லை இருந்தும் ஏன், நீ அதை செய்தாய்?
ஸார்! டிரிடானை தேடிப்பிடித்து வேரறுக்க அவனுக்கு உத்தர விடப்பட்டிருந்தது.
29


முட்டாள்தனமான முயற்சி- இதுவரை அக்காரியத்தில் இறங்கியவர்கள் அனைவருமே இப்போது பரலோகத்தில்! காரிகன நமக்கு ஒரு சவாலே அல்ல!
அவன் வசம் மூன்று புகைப்படங்கள் இருந்தன. அடிப்படை உண்மை ஒன்றை அவன் புரிந்துகொண்டதாக தெரியவந்தது-
ஹை! செத்துப்போன ஒற்றன் அவற்றை தபாலில் அனுப்பி வைத்தது காரிகனின் முகவரிக்குத்தானே?
ஐயோ- அநியாயமாக அவனுடைய ஃப்ளாட்டை எரித்தேனே!
அந்த புகைப்படங்கள் எனக்கு கிலேசத்தை ஏற்படுத்துகின்றன! அவற்றை நீ கைப்பற்றினாயோ?
ஆம்! அவனுடைய பையிலிருந்து எடுத்தேன்! ஆனால் தோட்டா அவற்றை சின்னாபின்னப்படுத்தியிருந்தன.


உன் கௌரவமான பதவிக்கு ஆபத்து ஏற்படுத்தக்கூடிய அந்தக் காரியத்தை நீ ஏன் செய்தாய்?
ஹைக்கனை ஏவினேன்! தோற்றுவிட்டதோடு உயிரையும் விட்டுவிட் டான்!


ஹைக்கன் திறமைசாலி-யாயிற்றே!
காரிகன் அசகாய சூரன் போலும்! கொலைசெய்ய ஆள் தேவை-அவனை நம் அணியில் சேர்த்துக்கொள்ள முடிந்திருந்தால் ஹூம் இனிப்பேசிப் பயனில்லை!
அந்தக் கொலை செய்ய வேண்டிய பொறுப்பை உன்னிடமே ஒப்படைக்கிறேன்!



கொலையா?
ஹா-ஹா-ஆமாம்!
காரிகனை கொன்றதற்காக என்னைப் பழித்த நீங்கள் இப்போது-
க்ளோ-க்ளோவை அழைக்கட்டுமா? எதிர்வாதமா பண்ணுகிறாய்-திமிர்பிடித்தவனே!
டிரிடானின் அங்கம் வகிக்கும் உனக்குத் தெரியும்-ஒவ்வொரு நாட்டிலிருந்தும் பணத்தை நாம் கறந்துவரும் சங்கதி! மேலதிகாரிகள் மூலம் நிறைவேறி வருகிறது-சுமுகமாக-
அவர்கள் நம் ஆட்கள்-இல்லையா?
ஆமாம்! அமெரிக்காவில் நீ இருக்கிறதைப் போல!
உங்களால் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகள்-
உலக நாடுகள் பல பண நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் இக்கட்டான வேளையில் பணக்கார நாடுகள் தாராளமாக கடன்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கும் இத் தருணத்தில்-
அஹ்-! தங்கள் பங்கை பெற விழைகிறது டிரிடான் அப்படித்தானே!


அதுமட்டுமல்ல! உன் புகைப் படத்தில் இருக்கும் நிதி மந் திரி நம் உத்தரவுகளுக்கு கீழ்ப்படிவதில்லை-
அந்த திமிருக்குத் தண்டனை-என்ன தெரியுமா?
நிதிமந்திரியை நான் தீர்த்துக்கட்ட வேண்டும் என்கிறீர்களா?
இல்லை-வேறொரு திட்டம் வைத் திருக்கிறேன்-
சமயம் வரும் போது தெரிந்து கொள்வாய்.
சம்பவம் ஒரு பொது இடத்தில், ஜனத்திரளின் மத்தியில் பட்டப் பகலில் நடக்க வேண்டும்.
பயலை அச்சுறுத்தி மீண்டும் நமக்கு சேவகம் செய்ய வைக்கும் அது!
ஓஹோ! யாரையாவது ஒரு அப்பாவியை பலிகடாவாக்கி மந்திரிக்கு மரணபயத்தை ஏற்படுத்த நினைக்கிறீர்க ளாக்கும்?
அப்படியானால் என் கதி?
மைடியர் நில்லி! உன்னை நான் காப்பாற்ற மாட்டேனா-என்மீது நம்பிக்கை இல்லையா உனக்கு?
அங்கே யு.எஸ்ஸில்-
டிரிடனை ஒழித்துக் கட்டப் போன காரிகன் என்னவானான்-?
தகவல் இல்லை!


நான் சொல்கிறேன்! ஒன்று அவனை டிரிடான் அடிமையாக்கிக் கொண்டிருக்கக் கூடும்-
அல்லது விரைவிலேயே அவனுடைய சடலம் உங்களுக்கு வந்து சேரக்கூடும்!
அங்கே-
இந்தப் பாடம் உனக்கும் சேர்த்துத்தான் நில்லி! யாரை, எப்போது கொல்லச் சொல்கிறேனோ நீ உடனே செய்து முடிக்கிறாய்!
யெஸ்-ஸார்!
நடக்காதடா சண்டாளா!
நில்லியின் தோற்றத்தில் மாற்றம் தேவை-போலீஸாரிடம் புகைப் படம் இருக்கலாம்-ஆபத்தாகிவிடும்!
யெஸ்-ஸார்!
மீண்டும் என்னை காரிகனாக மாற்றி விட நினைக்கிறார்களோ?
கண்களை கட்டு வீயெஸ்-நாம் போகலாம்!
இம்முறை ஏன் இந்தக் கண்கட்டு?
உஷ்ஷ்-ஏற்கனவே அவர்களுடைய கோபத்தை நிறைய கிளறிவிட்டிருக்கிறீர்கள்!
படி-! கவனமாக இறங்குங்கள்!
இந்த இடத்தை நான் பார்க்க வேண்டுமே! ஆவ்வ்-கால் இடறிவிட்டது!
திட்டமிட்டு கீழே விழுந்தார் காரிகன்!
தெருப் பெயர் பலகை-அரைகுறையாக கண்ணில்பட்டது!
ஒவ்வ்!



அடிபட்டுக் கொண்டதில் நினைவு தப்பியது காரிகனுக்கு!
ஓவ்வ்-மயக்க மடைந்து விட்டார்!
க்ளோ-க்ளோ-தூக்கிக் கொண்டுபோய் காரில் போடு!
நில்லி-! எப்படி இருக்கிறது உங்களுக்கு!
ம்ம்-தலை-சுற்று கிறது.
கார் சீட்டின் முதுகு பகுதியில் உள்ள பாக் கட்டில் நகர மேப் இருக்கலாம்-
யெஸ்-இதோ!
உன் மாமாவின் வீடு வந்துவிட்டது வீயெஸ்-
நில்லி இறங்குங்கள்-நான் ஒத்தாசை பண்ணுகிறேன்!
தாங்க்ஸ்!
உன் தந்தி கிடைத்தது வீயெஸ்! நீ குறிப்பிட் டிருந்த ஆசாமி இவர்தானா?
ஆமாம் ஆன்ட்டி! நில்லி என்று பெயர். என் வருங்காலக் கணவர்-


அட-என்ன இது-தலையில் காயம்?
என் கவனக் குறைவுக்கு கிடைத்த தண்டனை-
வாருங்கள்-கழுவி மருந்திடுகிறேன்! வீயெஸ்! வெளியே போயிருக்கும் உன் மாமா எந்த விநாடியிலும் வந்து சேரக் கூடும்!
ஓஓ! ரொம்பவும்தான் அடிபட்டிருக்கிறது டியர்!
கவனக் குறைவுக்கு கிடைத்த பரிசு அன்பே!
என் கைபட்டால் விரைவிலேயே குணமாகி விடும்!
ஹலோ-என்ன இது-தவறிப்போய் ஆஸ்பத்திரிக்குள்ளே நுழைந்து விட்டேனா?
அங்கிள் பென்ஷர்! இப்போ நீங்க கொஞ்சம் வளர்ந்து விட்ட மாதிரி தோணுது!
உன் ஆண்ட்டி கிட்டே சொல்-நம்ப மாட்டேங்கிறா!


உங்க கோட்டை நான் ஹாங்கரிலே போடுகி றேன்-நீங்க வீயெஸ்-ஸோட போங்க-உங்கள் அறைக்கு!
நோ! கொடுங்கள் அதை என்னிடம்! அந்த 'மேப்' அதில் இருக்கிறது!
ஓ ஸாரி!
கோபமாக கத்தி விட்டேன்-இல்லையா? தலையில் அடிபட்ட தால் நிதானமில்லை-ஸாரி!
டாக்டருக்கு போன் பண்ணட்டுமா?
அவசியமில்லை-
தூங்கி எழுந்தால் சரியாகி விடும்!
நில்லி-ஜெல்ட்டின் திட்டப்படி நீங்கள் கொலை செய்வீர்களா-என்ன?
ஜெல்ட் உத்தரவை மீற முடியுமா என்ன?
நினைத்துப் பார்க்கவே சங்கடமாக இருக்கிறது!
வேறு ஏதேனும் உபாயம் இருந்தால் சொல்லேன்!
ஊஹூம்! உங்களை கொலை-யாளியாக கற்பனை செய்து பார்க்க முடியவில்லை!


கொலை செய்யத் திராணியற்றவன் என்று என்னைக் கருதுகிறாயா-
அப்படியில்லை! உங்கள் முகத்தைப் பார்த்தால் நல்லவர் மாதிரி-
இவள் வெகுளியா? இல்லை-என்னை ஆழம் பார்க்கிறாளா? நான் எதற்கும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.
ஏன் வீண் வாதம்? வேறு வழியில்லை எனக்கு-குட்நைட்-வீயெஸ்!
இனி மேப்பை ஆராயலாம்!
SEA
தெருப் பெயரில் பாதி கண்ணில் விட்டது-
டிரிடான் தலைமையகம் இருக்கும் தெருப்பெயர் "SEAL" என்று தொடங்கியது-
சே! அரைடஜன் தெருப் பெயர்கள் "SEAL" என்று தொடங்குகின்றன!
அத்தனை தெருவையும் ஆராய வேண்டுமா? ஹம்-!
மேப்பை ஒளித்து வைக்க வேண்டும்!
ஆண்ட்டி மாரீஸ் இதை கொடுத்து அனுப்பினார்கள்-பருகினால் ஆழ்ந்த தூக்கம் உத்தரவாதமாம்!



ஆழ்ந்த தூக்கம்-
எனக்குத் தேவை
தான்!
ஹே-என்ன
இது-மயக்கம்
வருகிற மாதிரி_
ஊய்ய்-நான் அந்த பானத்தை
பருகி-யிருக்-கக் கூடாதோ-
சுயவுணர்விழந்து
படுக்கையில் சரிந்
தார் காரிகன்-
மறுநாள்
காலையில்-
ஓ! எல்லோருமாகச்
சேர்ந்து எனக்கு எதிராக
சதி செய்கிறார்களா
என்ன? ஏன்?
ஓ-புரிகிறது! என் மூட்டை
முடிச்சுகள் சோதனைபோ
டப்பட்டிருக்கின்றன!
ஓ-ஒரு வழியாக விழித்
தெழுந்து விட்டீர்களா!
இவள் முகத்தில்
கபடம் கொஞ்சமும்
தென்படவில்லை!


அங்கிள் கிளம்பிச் சென்று வெகுநேரமாகி விட்டது- நானும் ஆண்ட்டியும் ஷாப்பிங் போகிறோம்- நீங்கள் ஓய்வெடுங்கள்!
நோ! தெம்பாக இருக்கிறேன்! நகர மேப் ஒன்று கிடைத்தது- ஊர் சுற்றிப் பார்க்கப் போகிறேன்!
திடீரென்று ஜெல்ட்டிடமிருந்து அழைப்பு வந்தால்? அவருக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தாதீர்கள்-நல்லதில்லை!
பயப்படாதே வீயெஸ்! ஒரு 'விபத்தை' அரங்கேற்ற நிறைய திட்டமிட வேண்டும்- சமீபத்தில் என்னைத் தேட மாட்டார் ஜெல்ட்!
ஒருவேளை-


காத்திருக்கட்டுமே! இந்த நகர அமைப்பை நான் தெளிவாக வைத்திருந்தால்தானே அவருடைய திட்டத்தை நான் கச்சிதமாக செய்து முடிக்க முடியும்!
ஊஹூம் எதையோ மறைக்கிறீர்கள்!
இல்லை வீயெஸ்- என்னை நம்பு!
வீயெஸ்-வா போகலாம்- டாக்ஸி ரெடி!
அவர்கள் சென்றதும் காரிகனும் வெளியே கிளம்பி விட்டார்-டிரிடானின் தலைமையகத்தை தேடிக் கண்டுபிடிக்க-
முதலில் இந்த இடத்தை நான் நன்றாக நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்!
அதோ-இடது மூலையில் உள்ளது தான் என் அறையாக இருக்கக் கூடும்-ம்ம்ம்-



ஆபீஸர்! SEAL-என்று தொடங்கும் தெருக்களைப் பற்றி கொஞ்சம் விபரம் சொல்ல முடியுமா?
ஓ-யெஸ்! SEALYHAM-ஆடம்பரப் பகுதி-அருகில்தான் உள்ளது! SEALINE ஒரு புது காலனி அங்கே உள்ள வீடுகள் அனைத்தும் சிறியவை!
SEALOFT-தெருமுழுக்க கிடங்குகள் தான்! ஆபத்தான பகுதி- அங்கே போவதானால் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் நீங்கள்!
SEALYHAM தான் நான் தேடும் தெருஎன்றுதோன்றுகிறது-தாங்க்யூ-ஸார்!
SEALYHAM STREET...
ஊஹூம் இந்தத் தெரு இல்லை-இன்றிரவு SEALINE க்கு சென்று பார்க்க வேண்டும்!
அன்று மாலை-
மிஸ்டர் பென்ஹர் போன் பண்ணினார் மேடம்.வீடு திரும்ப நள்ளிரவுக்கு மேல் ஆகலாமாம்!
அங்கிளுக்கு கிளப்பை விட்டு வெளியேற இஷ்டமே இராது போலிருக்கிறது!
இங்கே நடப்பவை அனைத்தும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன-
ஆண்ட்டி பானம் கொடுத்தனுப்பினாள்! பருகினால் நன்றாக தூக்கம் வருமாம்!


தாங்க்ஸ்!
ரொம்ப பிடிச் சிருக்கு-எனக்கு!
ஓ யாரோ என்னை வேவு பார்க்கிறார்கள்- எல்லோருக்குமே டிரிடானோடு தொடர்பு இருக்கும் போலிருக்கிறது.
நான் தூங்கிவிட்டதாக நம்பிக் கொண்டிருப்பார்கள்- இதோ கிளம்பி விட்டேன்- இன்னொரு 'SEAL'' தெருவைத் தேடி!
இந்தக் குழாய்- சும்மா சொல்லக் கூடாது-ரொம்ப உறுதியாக இருக்கிறது!
பிறகு மேலே ஏற இதைத்தான் நம்பியிருக்கிறேன்!
தேடும் படலம் தொடர்ந்தது-
யாருடைய உதவியையும் எதிர்பார்க்கக் கூடாது- ஆபத்தாகி விடலாம்!
நெருங்கி விட்டேன்-



ஊஹூம் இந்தத் தெருவும் இல்லை! இரவு முழுக்க சுற்றியலைந்ததுதான் மிச்சம்!
விடியப் போகிறது- நான் உடனடியாக வீடு திரும்பியாக வேண்டும்!
மணி என்ன?
ஆவ்வ் - மிகக்குறைந்த அவகாசமே உள்ளது!
உஹ-ஹ்ஹ-
இருட்டு சந்தின் வழியாக ஓடினான் காரிகன்-
அவருடைய கெட்ட நேரம்-
நாய் குரைத்ததுகேட்டு உஷாரானான் ரோந்து போலீஸ்காரன்
ஏய் யாரங்கே மரியாதையாக வா வெளியே!
போலீஸ்! அகப் பட்டுக் கொண்டு விடலாகாது!



தந்திரமாக தப்பித்துக் கொள்ள வேண்டும்!
ஸாரி ஸார்-இது எப் போதுமே இப்படித்தான் சனியன் குரைத்து எரிச்சல் மூட்டிவிடும்!
சரி-சரி- பார்த்துக் கொள்ளுங்கள்!
இனி நீ போகலாம் உன் வழியில்!
நானும் என் வழியில் போகிறேன்!
வழியில் வேறு யாரும் குறுக்கிடாமலிருந் தால் நன்றாக இருக்கும்.
ஆனால் உள்ளே யாரோ காரிகனின் அறையை நோக்கி போய்க்கொண் டிருந்தார்கள்.
அப்பாடா ஒரு வழியாக திரும்பி வந்து சேர்ந்து விட்டேன்.



இன்றைய தூக்கம் கோவிந்தா!
எ-ன்-ன?
யாரோ வெளியே
ஊஹூம்-கண்டுபிடித்து விடக்கூடாது-
பயந்தோடி தன் படுக்கையில் விழுந்தார் காரிகன்-
கதவை மெள்ளத் திறந்தது கரிய உருவம் ஒன்று-
மெல்லிய குரலில்-
அவரை அழைத்தது-
நில்லி?
நிதானமாக மூச்சுவிட முயன்று கொண்டிருந்தார் காரிகன்-
போய்விட்டானே?
இல்லை-
46


டார்ச் விளக்கு ஒன்று பளீரிட்டது-
நில்லி?
ஓ·?நீ-? போ- ஆவ்வ்·தூக்·கம்· ஷ்ஷ்ஷ!
வந்த ஆள் கதவை சாத்திவிட்டுப் போய் விட்டான். மருந்து கலந்த பானத்தை பருகியதால் ஆழ்ந்த தூக்கத்தில் இருப் பதான பாவனையில் காரிகன் அசையவே யில்லை.
யாரா இருக்கும்?
எவனுக இருந்தால் என்ன-எனக்கு இப்போது கொஞ்சம் தூக்கம் அவசியப்படுகிறது-
ஒரு தூக்கம் போட்டுவிட்டு எழுந்த காரிகன் கதவருகே ஒரு கடிதம் கிடைக்கக் கண்டார்-
தூங்குமூஞ்சி, சாயந்திரம் ஏழு மணிக்குத்தான் வருவோம்! டாடா!
ஏதோ சூழ்ச்சிவலை! ஆனுலும் SEALOFT தெருவுக்குச் செல்லத் தீர்மானித்து விட்டேன்.
எல்லோருமே டிரிடானின் ஆட்களா?
வந்தது யாராக இருக்கும்?
எப்படியிருந்தாலும் என் திட்டத்தில் மாற்றமில்லை!



இதற்கிடையே- ஜெல்ட் புதியதொரு முகமூடியுடன்-
ஹாக்கின்ஸ்- நில்லியைப்பற்றி என் உள்மனதில் உறுத்திக்கொண்டிருக்கிறது.
அவனை பின் தொடர ஒரு திறமைசாலியை அனுப்பி வை.
அங்கே- அமெரிக்காவில்-
காரிகனைப்பற்றி தகவல் வரவில்லையாக்கும்?
வரும் சேதி நல்ல படியாக இராது என்றவரை அடித்துச் சொலவேன்!
என்னை கண்காணிக்க டிரிடான் ஏற்பாடு செய்திருக்கிறதோ!
ஆள்- அழுத்தமான ஆசாமி தான் போலும்!
சமர்த்தாக கொல்லைபுற வழியாக நழுவிவிட வேண்டும!
ஆனால் அவருடைய துரதிர்ஷ்டம் ஒற்றன் அந்த வேளையில் அந்தப் பக்கம் நோட்டமிட வந்து கொண்டிருந்தான்-
ஆல்ரைட்- இதுதான் SEALOFT தெரு! ஒரே குப்பையும் கூளமுமாக கிடக்கிறதே! நான பார்த்த சொகுசு கட்டிடம் இந்தப் பகுதியில் இருக்க வாய்ப்பில்லையே!
போய் மீண்டும் மேப்பை ஆராய வேண்டும்-


ஆனால் அவர் நகரத் தொடங்கியதும்-
டிரிடானின் ஆளா? இல்லை-உள்ளூர் ரௌடியா?
டிரிடானின் ஆள் என்றால்·
-என் உண்மை சொரூபம் தெரிந்து விட்டதோ?
நான் முந்திக் கொள்ள வேண்டும்-
ஆனால் 'SEAL' என்ற குறிப்பை தவிர வேறு பிடி ஏதும் கிடையாது என்னிடம்!
இந்தத் தெருவாகத் தான் இருக்குமா?
'விபத்து'க்களை உருவாக்குவது டிரிடானின் சிறப்பு
நான் படு ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும்!
அந்த ஆசாமியை எனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வழி இருக்கிறதா? குழப்புகிறதே!
ஆல்ரைட் இப்படிச் செய்யலாம்!


வீயெஸ்ஸின் இடம் வந்து விட்டது- அவனை கழற்றிவிட முடியுமேயானால்-
உன் சாமார்த்தியத் திற்கு சவால் இது- ஜெயிக்கிறாயா பார்ப்போம்!
சட்டென்று சுற்றுச் சுவரை தாண்டிக் குதித்தார் காரிகன்-
ஓடு-ஓடிப்போய் என்னைப் பற்றி உன் தலைவனிடம் கூறு!
காரிகன் எதிர்பார்த்தபடியே திரும்பி நடந்தான் அந்த ஆள்!
இனி அவனை நான் பின்தொடர்ந்தால் டிரிடானின் தலைமையகம் இருக்குமிடம் தெரிந்து விடும்!


கடைசியில் இந்தத் தெரு தானா?
வாட்-?
எங்கே மறைந்தான்!
நான் தடுக்கி விழுந்த இடத்தில் இரண்டு படிகள் இருந்தன-
இந்த சிதிலமடைந்த
வருக-வருக!
க்ளோ-க்ளோ!


மிஸ்டர் ஜெல்ட் சொன்னது சரியாப் போச்சு!
உனக்கு இனி போதாத காலம் அப்பனே!
டிரிடானுக்கு அடிமை செய்ய பிரமாணம் செய்திருக்கிறேன் - மாறமாட்டேன்!
கொ-ல்-லா-தே-என்னை!
என்னை விட்டுவிடு-நிறைய பணம் தருகிறேன்!
இலஞ்சம் கொடுத்து விலைக்கு வாங்கி விட முடியாது என்னை!
ஆ ஆ!
சட்டென்று காரிகன் சரிந்ததும் க்ளோ-க்ளோ நிலை தடுமாறி தள்ளாடினான் -
குபீரென்று அதிரடியாக எழுந்தார் காரிகன்-
டும்!


நோ - நோ - இது உனக்கு நல்ல தில்லை!
க்ளோ - க்ளோவின் கோபத்தை கிளறிவிட்டாய்-
உன்னை -
அடித்து நொறுக்கி அள்ளிக் கொண்டு போய் மாஸ்டரின் முன்னால் வைக்கி றேனா இல்லையா பார்!
உன்னிடம் நிறைய தந்திரம் இருக்கிறது-
நானும் சளைத்தவ னில்லை!
பட்!



புரிந்ததா?
தொலைந்தாய் இத்தோடு!
என்னதான் நடந்தது என்று புரிந்து கொள்ளுமுன் தலை குப்புறப் போய் விழுந்தான் க்ளோ-க்ளோ!
இது நியாய மில்லை -
ணாங்!
கோழை-முறை தவறி சண்டையிடுகிறாய்!
எது முறை!
இது-எப்படி?


மர்மப் பிடி போட்டு புரட்டி எடுத்தார் அந்தக் குண்டனை--
நமக்குள் ஒரு ஒப்பந்தம்-
ஐயோ-விடு-விடு-என்னை-
டிரிடானோடு உள்ள உறவை துண்டித்துக்கொள்-உன்னை விட்டுவிடுகிறேன்!
முடியாது-பிரமாணம் செய்து கொடுத்திருக்கிறேனே?
புலி வாலைப் பிடித்திருக்கிறாய் நீ- என்னை நீ போகவிட்டாலும், இங்கேயே கொன்று போட்டாலும்-
-டிரிடான் உன்னை கொல்லாமல் விடாது!
என்ன செய்யப் போகிறாய் என்னை?
விடப்போவதில்லை! கொல்லவும் மாட்டேன்! கையை முறுக்கி எலும்பை உடைப்பேன்-ஆயுளுக்கும் முடவனாக முடங்கிக் கிடக்கப் போகிறாய் நீ!


ஐந்து செகண்டுகள் அவகாசம் தருகிறேன்- ஒன்று-
இரண்டு-
மூன்று-
நீ ஏமாற்றும் பேர்வழி- போலீஸை சேர்ந்தவன் என்று தோன்றுகிறது-
நீ என்னைக் கொல்ல மாட்டாய்-
இது ஜீவ மரணப் பிரச்னை-மறந்து விடாதே!
நான்கு-
ஐந்து!
வேண்டாம்! பொறு! பிரமாணம் செய்திருக்கிறேன். ஆனால் ஒன்று நான் உன்னை காட்டிக் கொடுக்க மாட்டேன்-உன் விவகாரத்தில் நான் ஒதுங்கியே இருப்பேன்!
சரியான பேரம்! போய்த் தொலை!
வீயெஸ் நில்லியோட நம்ம பைலை எடுத்து வா-அந்த ஆசாமியைப்பற்றி என்னவோ உறுத்துகிறது என் நெஞ்சிலே!
யெஸ்-ஸார்!
ஹே! இங்கே பாரேன்! உண்மையான நில்லியோட காதின் மடலில் தொங்கு சதை இல்லை! ஆனால் நீ கொண்டு வந்த நபருக்கு தீர்க்கமான தொங்கு சதை உள்ளது.
அ-அப்படியானால் யாரது?


ஹாக்கின்ஸ்! நம் இரகசியப் படையை உஷார்படுத்து!
வீயெஸ்-வா- உன் அங்கிளின் வீட்டுக்கு ஓடு!
நில்லி அங்கே இருந்தால் அழைத்து வா என்னிடம்!
மறுகணம்-
ஊப்ப்.
காரில் கொண்டுபோய் விடுகிறேனே-
டாக்ஸியை பிடித்து நான் அங்கே முதலில் போய்ச் சேர்ந்துவிட வேண்டும்!
அவர்களை முந்திக் கொண்டு வீடு திரும்பினார்.
ஆயிற்று-என் ஆய்வு அறிக்கையை எழுதி முடித்துவிட்டேன்-
ஹலோ-நில்லி! மிஸ்டர் ஜெல்ட் உங்களை அழைக்கிறார்!
ஆனால்-
எதற்காக?
அங்கே போகாதீர்கள்- இப்படியே எங்கேயாவது ஓடிப்போய் விடுங்கள்-
என்ன சொல்கிறாய் நீ?
உங்களுடைய வேடம் கலைந்து விட்டது!
டிரிடான் விவகாரத்தைப் பற்றி தெளிவாக எழுதி ஒரு கவரில் போட்டு அதை கீழே நழுவ விட்டார் காரிகை!
என்ன தாமதம்? ஜெல்ட் பொறுமைசாலி இல்லை!


சரி·விடு வண்டியை!
ப்ளீஸ்-வேண்டாம்-நில்லி!
இதோ வந்து கொண்டிருக்கிறோம் ஸார்-வீயெஸ்-நில்லியோட கண்களைக் கட்டு!
அங்கே-உண்மையான நில்லி-
ஹே-சீஃப்! உங்க ஆசாமி கிட்டேயிருந்து எந்தத் தகவலும் வரவில்லையா!
ஊஹூம்·வராது-ஜெல்ட் அவனுக்கு அங்கேயே சவ அடக்கம் பண்ணியிருப்பார்!
நில்லி வேடத்தில் இருப்பது காரிகன் என்று தெரிகிறது. அவனை நாம் தெரிந்துகொண்ட உண்மை அவனுக்குத் தெரியாது! வரட்டும் தகுந்த 'வரவேற்பு' காத்திருக்கிறது!
டிரிடானின் தலைமையகத்தை வந்தடைந்ததும்-
இறங்கு-நில்லி!
நீங்கள் யாராக இருந்தாலும்-இப்படியே ஓடிப்போய் விடுங்கள்! இல்லையேல் உயிருக்கே ஆபத்து·ஓடுங்கள்!


என் மீது உனக்குள்ள அபிமானத்தை புரிந்து கொண்டேன் வீயெஸ்வா-உள்ளே போவோம்!
நம் இருவரையும் கொன்றுவிடுவார்கள் அந்த சண்டாளர்கள்!
ஜெல்ட் என்பது உண்மையில் யார்?
அவர்-
உன்னுடைய மாமா-
பென்ஹர் தானே?
உம்ம்!
நம்மில் யார் அவனை முதலில் அடித்து வீழ்த்துவது என்பதில் பந்தயம் வைப்போமா க்ளோ-க்ளோ!
நான் பந்தயத்திற்கு வரவில்லை ராஜா!
அதே சமயம் காரிகனின் கடிதம் ஒரு பெண்ணின் கவனத்தை ஈர்த்தது-!
"இதை எடுத்துக் கொண்டு போய் அருகில் உள்ள போலீஸ் ஸ்டேஷனில் சேர்க்கவும்"


ஆனால்-
?
ஓ.கே.! நன்றி மேடம்!
ஹா ஹா-ஹா-!
புதியதொரு துப்பறியும் நாவலின் கதையை . யாரோ டெஸ்ட் பண்ண நினைக்கிறாங்க போலிருக்கு-
ஹா-ஹா-ஹா-!
வீயெஸ்-நில்!
ஒரு முக்கியமான அம்சத்தை மறந்து விட்டேன்!
உன் முதுகுக்குப் பின்னால் எப்போதுமே எதிரியை வரவிடாதே- என்பது ஒரு பழைய அறிவுரை!
நில்லியை உள்ளே அனுப்பு- ஹாக்கின்ஸ்!
வீயெஸ்-காரை எடுத்துக் கொண்டு எங்கேயாவது ஓடிப்போய் புது வாழ்க்கை தொடங்கு-நீ செல்ல நான் பாதுகாப்பு தருகிறேன்!
உங்களால் முடியாது-எனவே நான் போக மாட்டேன்!



ஆல்ரைட்-
அப்படியானால்-
-மரபை விட்டொழித்து-
-முதலில் நான் போகிறேன்-உள்ளே!
காரிகன் உள்ளே நுழைந்தார்-
வருக-வருக-மிஸ்டர் நில்லி!
-நான் எதிர் பார்த்ததுதான்!
படீர்
க்ளோ-க்ளோ-ஏன் மரம் போல் நிற்கிறாய்!
போய் தாக்கு!
நீ என் அடிமை-போ-போய் அந்த வேடதாரியை ஒழித்துக்கட்டு!


ஓ-ஆண்டவனே!
ம்ம்-என் உத்தரவுக்கு கீழ்ப்படி!
யெஸ்-நில்லி-நான் மிஸ்டர் ஜெல்ட்டின் உத்தரவை மீற முடியாது!
இதற்கிடையே-அந்த போலீஸ்காரனுக்கு திடும் என சந்தேகம் வந்துவிட்டது-
டிரிடானைப் பற்றிய இந்த தகவல் பொய்யாக இருக்கலாம்! ஆனால் அதை தீர்மானிக்க வேண்டியது நானல்ல-தலைமையகம்!


இதுதான் ஸார் இந்த அறிக்கையின் சாராம்சம்! கீழே பிலிப் காரிகன் என்று கையெழுத் திட்டிருக்கிறது.
ஓ கே. கான்ஸ்டபிள்! டிரிடானைப் பற்றிய இந்த தகவல் பொய்யா இல்லையா என்று கொஞ்ச நேரத்தில் சொல்லிவிடுகிறேன்-
உருப்படியான தகவல் கிடைத்திருக்கிறது. உடனே நடவடிக்கை எடுக்கவும்.
ஓ-கே-ஸார்!
க்ளோ-க்ளோ-! அவனை தீர்த்துக் கட்டு-போ!
நீ மறுத்தால் உன்னை நான் கொன்று விடுவேன்!


ம்ம் · உயிர்மீது ஆசையிருந்தால் நில்லியை தீர்த்துக்கட்டு!
ஹே - யார்?
அப்பொழுது தான் முகமூடி -யின் பின்னாலிருந் -தது ஒரு பெண் என்பது தெரிந்தது!
பட்!
சண்டாளா-
க்ளோ-க்ளோவின் கையிலிருந்த கட்டாரி பறந்து சென்று அங்கிள் பென்ஹரை வீழ்த்தியது-
தாங்க்ஸ்-க்ளோ-க்ளோ-உன் பிர மானத்தை கைவிட்டு எனக்கு ஒத்தாசை புரிந்ததற்கு!
என் பிரமானம் மிஸ்டர் ஜெல்ட் டுக்குத்தானே தவிர யாரோ ஒரு பெண்ணுக்கு அல்ல...!
இருவரும் ஒட்டு மொத்தமாக போய்ச் சேருங்கள் நரகத்திற்கு!
இறுதி வெற்றி எனக்குத்தான்


நெருக்கடியான தருணம்-
காரிகன்-உன் வேடம் வெளிப்பட்டு விட்டது!
உன் கடைசிப் பிரார்த்தனையை சொல்லிக்கொள்!
டிரிடானைப் பற்றிய இந்த சங்கதி உண்மையாக இருக்குமா ஸார்!
பெயர் நிஜம்! அவர்கள் தில்லு முல்லு பேர்வழிகள் என்றும் தெரியும்! அவ்வளவுதான்!
POLICE
இன்னும் வேகமாக போப்பா!
என்னைக் கொன்றால் நீ தொலைந்தாய்- உன்னைப் பற்றிய முழு அறிக்கையையும் ஏற்கனவே போலிஸாருக்கு அனுப்பிவிட்டேன்!
பரவாயில்லை!
மூட்டை முடிச்சுகளை கட்டி வேனில் தயாராக வைத்து விட்டேன். புதிய இடத்திற்கு போய்விட தீர்மானித்து விட்டேன்!


எனவே-
டுமீல்!
காரிகன் செத்துவிட்டதாக முதலில் தவருக வந்த அறிக்கை இப்போது சரியாகி விட்டது-ஹா-ஹா- அடுத்து-துரோகி க்ளோ-க்ளோ- நீதான்!
வீயெஸ்-
வீயெஸ்-தக்க தருணத்தில் சாதனை புரிந்துவிட்டாய்!
நீங்கள் சுடப்பட்டது?
லேசான காயம்தான்!
வெளியே போலீஸ் சைரன் கேட்கிறது-இனி உங்களை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள்-
டிரிடான் சம்பந்தப்பட்ட அனைத்தும் வெளியே ஒரு வேனில் இருப்ப தாக மாரீஸ் சொன்னாளே?


நிஜம் தான்-!
போலீஸாரிடம் அகப்படடுக் கொள்வோமோ என்ற பயம் உனக்கு வேண்டாம்-என் உயிரை காப்பாற்றிய உன்னை நான் கைவிட்டு விடமாட்டேன்
இங்கே யாரும் தென்படவில்லை ஸார்!
உள்ளே போய்ப் பார்ப்போம் வா!
என்ன இது-எதிரிகள் யாரையும் காணோமே?
கவலைப்பட வேண்டாம் ஸார்! நமக்கு வேண்டிய ஆதாரங்கள் அனைத்தும் வெளியே வேனில் இருக்கின்றன!




பிரகாஷ் பப்ளிஷர்ஸ் நிறுவனத்தின் சார்பாக லயன் காமிக்ஸை அச்சிட்டு வெளியிடுபவரும், ஆசிரியரும்: S. விஜயன். முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ.எண்: 374 சிவகாசி. போன்: 21159 & 20649. அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி. வெளியீடு எண்: 77



விச்சு & கிச்சு
NOTICES
TEAM FOR SATURDAY
விச்சு- வர்ற சனிக்கிழமை ஆட்டத்தில்- ஐயா சென்டர் பார்வர்டாக விளையாடப் போறார்! வேலியோரம் கோல் கீப்பராகப் போய் நில்லு கொஞ்ச நேரம் 'ப்ராக்டிஸ்' பண்ணலாம்!
ஓ.கே. கிச்சு!
ஹோ ஹோ- 'அதிரடி கிச்சு'ன்னு எல்லோரும் என்னைக் கூப்பிடப் போறான்கள்!
அச்சோ! பந்து அண்டை வீட்டுக்காரரின் தோட்டத்திற்குள் போய் விட்டதே!
சாரி சார்! பந்தை திரும்ப எடுத்துக்கலாமா?
ம்ம்- இனிமேலாவது உன் மரமண்டை தோஸ்த்திடம் இந்த மாதிரி சேட்டை பண்ணாமல் இருக்கச் சொல்லு!
இடியட்!
CEMENT
காதில் விழுந்ததா கிச்சு? பந்தை எத்தியது போதும்!
அதனாலென்ன? பந்தை தலையில் முட்டி கோல் போடும் பயிற்சி செய்யலாம். முதலில் நீ!


அடப் பொடியா! அப்படியில்லே! என்னைப் பாரு- எப்படி பந்தை 'பட்' பண்ணு-வதுன்னு காட்டறேன்!
மண்டைக் கனம் பிடித்த பயல்!
பார்த்தியா? அட்டகாசமான கோல்!
போச்சுடா! பந்து திரும்பவும் போய் விட்டது!
ணங்
எங்கே இதை முட்டு பார்க்கலாம்!
ரொம்ப லேசு! பார்த்துக் கிட்டேயிரு!..
வே-வேண்டாம் கிச்சு!
டமால்
முற்றும்

## சந்தா பற்றி...!

டியர் ரீடர்ஸ்,

சமீப காலமாகவே நமது இதழ்களின் சந்தா விபரத்தை கேட்டு பலர் எழுதி வருகின்றனர்!

நமது இதழ்களின் விலை அவ்வப்போது மாறி வருவதால் சந்தாத் தொகையை சரியாக நிர்ணயிக்க முடியவில்லை. அது தவிர, தபாலில் நாங்கள் அனுப்பும் பிரதிகள் வாசகர்களுக்கு சரிவரப் போய் சேருவதில்லை. இதனால் பல வாசகர்கள் வருத்தப்பட்டு கடிதம் போட நேரிடுகிறது! இது போன்ற காரணங்களால் தற்சமயத்திற்கு புது சந்தாக்களை ஏற்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

ஜனவரி முதல் சரியான ஏற்பாடுகளை செய்து கொண்டு சந்தா பற்றி விளம்பரப்படுத்துகிறோம். அதுவரை உங்கள் ஊரிலுள்ள புத்தகக் கடைக்காரரை நச்சரித்து நமது காமிக்ஸ்களை வாங்கி வைக்கச் சொல்லுங்கள்!

நிர்வாகி.



## வாசகர் கடிதம்!

★ *பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.*

நிமிடத்துக்கு நிமிடம் வேகம் கூடும் எக்ஸ்பிரஸ் வண்டி போல் பக்கத்துக்குப் பக்கம் படு வேகம் கொண்ட விறுவிறுப்பான கதை- "அதிசயத் தீவில் ஆர்ச்சி"

★ *வை. வெங்கடேஸ்வரன், சா. அய்யம்பாளையம்*

'மரணத்தின் நிழலில்' படித்தேன். நீண்ட காலத்திற்குப் பின் நார்மன் வந்தாலும் தனது இரண்டு சாகஸங்களின் மூலம் தனது முத்திரையைப் பதித்து விட்டார்! ஸ்பைடரை வரவேற்கிறேன்.

★ *இரா. கருணாகரன், புதுவை 3*

நார்மனின் இரண்டு கதைகளும் பிரமாதமாக இருந்தது, படங்கள் தத்ரூபம்! "மேடம் கில்லடின்" என் நினைவை விட்டு இன்னும் அகன்ற பாடில்லை. அருமையான கதைகளையும், படங்களையும், உங்களால் மட்டும் எப்படித் தர முடிகிறதோ?

★ *D. விஸ்வநாதன், ஆவடி, சென்னை 55*

மலர்கள் மறப்பதில்லை
மணத்தைப் பரப்பிட!
கடலும் மறப்பதில்லை
அலைகளை எழுப்பிட!
நாங்களும் மறப்பதில்லை
லயன் காமிக்ஸ் படித்திட!



அடுத்த வெளியீடு! J. Pabitra




லயன் காமிக்ஸின்
ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில்
ஜீலை 1.ல் வருகிறது
ஆண்டு மலர்!



# ரூ.5000 பரிசு!